*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# ஔவையார் தனிப்பாடல்களில் அறம்

**முனைவர் சௌ.பா.சாலாவாணி ஸ்ரீ**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை**
**எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை.**

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் மனிதனை பண்படுத்தவே எழுந்தன. இவ்விலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை வலியுறுத்துகின்றன. மனித விழுமியங்களை விளக்க நேரிடும் இடம் எல்லாம் அறத்தினையே கைக்கொள்கின்றன. நற்செயல், நல் ஒழுக்கம், தீவனைச் செய்யாது இருத்தல், ஈதல், போன்றவை விளக்க அறம் என்னும் சொல் பயன்படுத்தி இருப்பதை அறியலாம். அறம் தனி மனிதனோடும், சமுதாயத்தோடும் நெருங்கிய தொடர்புடையது. மனிதனின் சமுதாய, சமய, பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் அறம் முக்கியமான பங்களிப்பைத் தருகிறது. அந்த வகையில் ஔவையார் அருளிய தனிப்பாடல்களில் காணலாகும் தனிமனித அறமே முதன்மை அறமாக காணப்பட்ட நிலையினை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஔவையார்

ஔவையார் என்னும் பெயர் பூண்ட புலவர் பலர் இருந்தனர். ஔவையாரின் தனிப்பாடல்கள் என்னும் நூலினைப் படைத்த ஔவை சங்க கால ஔவையில் இருந்து வேறுபட்டவர். சங்ககாலத்திற்குப் பிறகு, தமிழகத்தில் தொடர்ந்து அரசியலிலும் வாழ்வியலிலும் பற்பல மாறுதல்களோடு கடந்து வந்தன. இந்நிலையில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் அளவில், மீண்டும் ஓர் ஔவையாரைப்பற்றி அறிகின்றோம். கம்ப நாடரும், புகழேந்தியாரும், ஒட்டக்கூத்தரும், செயங்கொண்டாரும் மற்றும் புலவர் பெருமக்களும் வாழ்ந்த நாளிலே, அவர்கள் அனைவரும் போற்றும் அறிவுத் திட்பத்துடன் இந்த ஔவையார் விளங்கினார். இவர் பாடியவையாக நமக்குக் கிடைப்பனவெல்லாம் தனித்தனிச் செய்யுட்களேயாகும். பந்தன் அந்தாதி என்ற ஒரு நூலும், "அசதிக்கோவை' என்றொரு கோவையும் இவரால் இயற்றப்பட்டதாகக் கூறுகின்றார்கள் சான்றோர் பெருமக்கள். அவற்றுள் கிடைப்பன மிகச்சிலப் பாடல்களே. இவர் மிகச் சிறந்த சிவபக்தராகவும், விநாயகப் பெருமானைப் போற்றி வழிபட்டவராகவும் அறியப்படுகின்றார். இவர் இரண்டாவது ஔவையார் என ஆய்வாளர்கள் கூறுவர். இவர் தம் இலக்கியத்தில் அன்பை அடிப்படையாகவும் அறத்தைத் துணையாகவும் கொண்டு அமைவதே வாழ்வியலுக்கான விழுமியம் என்னும் கருத்தினைப் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார்.

## ஈதலே அறம்

உலக வாழ்வில் மனிதனின் செயல் முயற்சிகள் பலபடியாக அமைகின்றன. இவற்றையெல்லாம் "அறம் பொருள் இன்பம் வீடு" என்னும் நான்கினுள் ஆன்றோர் அடக்கிக் காண்பார்கள். கழகத் தமிழகராதி **அறன்** என்பதற்குக் கடமை, தருமம்,

கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியம், அறநூல் என்னும் பொருள்களைத் தருகின்றது.

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்” ( தொல் கள 89)**

என தொல்காப்பிரும்,

**“அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே”**

என நன்னூலாரும் அறத்திற்கு பொருள் தருகின்றனர். அறம் மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறை வடிவே அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என அறத்தினை வரையறுத்துக்கூறுவர். உலகியலின் விழுமியங்களை விளக்கி உரைக்க எழுந்த அற நூல்கள் கணக்கில் அடங்கா. இவை நான்கின் தத்துவப் பொருளை, ஒரே செய்யுளில் அடக்கி, அனைவரும் எளிதாகப் புரிந்து மேற்கொள்ளும்படியாக உதவுகின்றார் ஔவையார்.

**“ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்”**

எனும் வரியில் அமைந்த பாடலில் செல்வம் நமதன்று. உலகிலே பெறும் இது, உலகினராகிய அனைவருக்குமே உரியது என்பதனை உணர்ந்து, வந்தவர்கட்கு மனமுவந்து ஈதல் வேண்டும். இவ்வாறு மனமுவந்து ஈதலே “அறம்“ எனப்படுவதாம். பொருள்களைத் தேடுவது கடமை. பொருளில்லாதவர்க்கு இவ்வுலக வாழ்வும் சிறப்பாக வாயாதன்றோ! இப் பொருளைத் தேடும் முறையில்தான் நீதி குறுக்கிடுகிறது.

**நல்காத செல்வம்**

செல்வத்தின் நிலையற்ற நிலையினை நம் முன்னோர்கள் உணர்ந்து வைத்திருந்தனர். செல்வம் சிலரிடம் தானாகவே வந்து சேருகின்றது. பலரிடம் முயற்சியின் அளவாலே கிடக்கப் பெருகின்றது, தொழில் வளர்ச்சியிலும்கூடச் சிலரிடம் செல்வம் மிகுதியாக வந்து சேர்வது இல்லை. இத்தகைய நிலையற்ற தன்மையினை ஔவை பெருமகளாரும் நவில்ந்திருப்பது நோக்கத்தக்கது. இதனால், செல்வம் சேர்வது பிறருக்குக் கொடுத்து அவரையும் நல்வாழ்வினராகச் செய்வதற்கே என்னும் அறச்சிந்தனையினை அவர்கள் வற்புறுத்தினர். கொடுக்கும் பண்பு சிறந்த மனிதப் பண்பாகவும் ஆயிற்று. கொடுப்பவரினும், மேம்பட்ட வள்ளல்களாகப் பலர் இருந்தனர். கொடையினால் நாட்டின்கண் பரவுகின்ற புகழையும் அதனால் தமக்கு உயர்கின்ற பேற்றையும் கருதி, கொடுக்கும் குணமற்ற சிலரும்கூடக் கொடுக்கும் வழக்கம் உடையவராக மாறினர். சோழன் கொடை மரபினை அறியாதவன் அல்லன். இருப்பினும் சிவன் அடியார்களுக்கு பொருள் வழங்குவது முறையா? எனும் ஐயம் எழலாயிற்று. சோழனின் அறிவுநுட்பம் ஔவையாரைச் சிந்திக்க வைத்தது. “மன்னவ! செல்வத்தைச் சிவனடியார்க்கு வழங்க வேண்டுமோ என்கிறாய்? அவர்கள் அதனைச் சிவகாரியங்களாகிற பொது நன்மைக்கு உதவுகிறவற்றிலேதான் செலவிடுவர். அதனால், அவருக்கு அளிக்கும் கொடை அளவற்ற பலருக்கும் அளித்த கொடையாகிப் பரந்த புகழினை நினக்குத் தருகிறது. இதனை எண்ணினால், அவருக்கு மனமுவந்து வாரி வழங்குதலே செய்ய வேண்டியதாகும் என்பேன்.

**“நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்”**

அடியவர்க்கு நல்குவதே சிறப்புடைய செயலாகும், அடியார் உலக நலம் கருதுபவர். உலகம் உய்வதற்குப் பாடுபடும் உயர்ந்தோருக்கு உதவுவது மிக உயர்வுடையதாகும் என்ற ஔவையாரின் விளக்கம் மிகவும் தெளிவாக இருந்தது.

**அமுதும் அன்பும்**

அறப்பண்பில் தலையாய அறமாக கருதப்படுவது பசித்தவருக்கு உணவளிப்பது. பசித்தீ மிகவும் கொடியது. **“பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்”**

என்பார்கள்.ஆனால் இங்கு அன்புக்கு எளியரான ஔவையார் பசி வந்தவிடத்தும், அறத்திற்கு எதிராக செயல்படும் நிலையினை முன்வைக்கும் இடத்தில்,

**“காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே**
**மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்”**

என்ற வரிகளில் ஐயையோ! அன்பில்லாத நின் மனையாள் இட்ட அமுது அது! அதனைக் காணவும் கண்கள் கூசுகின்றன! கையால் எடுக்கவும் வெட்கமாகின்றது. பெருமை நிறைந்த என் வாயும் திறக்க மாட்டேன் என்கிறது. பயனின்றி என் எலும்பெல்லாம் பற்றி எரிகின்றது'' அன்போடு அளிக்கும் கூழையும் வியந்து உண்டு பாராட்டும் அந்தக் கனிவான உள்ளமும் கனன்றது என்கிறார். வாழ்வியலில் தலையாய அறம் பிறழும் போது அதனை கண்டிக்கும் பான்மையில் வலியுறுத்துகிறார். மேலும் மிகக் கொடியது என்பது “அன்பற்ற மனைவி இடுகின்ற உணவினையும் விருப்பத்துடன் உண்டு உயிர் வாழ்கின்ற ஆடவனின் நிலைமைதான்' என்பதனை நயமாக எடுத்துரைகின்றார்.

**இனியது எது?**

வாழ்வியல் விழுமியங்களில் சிறந்த அறம் பிறருக்கு தீங்கு வராமல் உலக இன்பங்களை பெறுவதாகும்.அத்தகைய இன்பங்களை குறித்து ஔவையார் கூறுமிடத்தில் இன்பம் என்பது அவரவர் மனத்தின் அனுபவமே என்கிறார். ஒருவன் ஒன்றை இன்பமாக நினைக்கலாம். அதனை இன்னொருவன் துன்பமாகக் கருதலாம். இன்ப துன்பங்கள் ஆகிய இரண்டும் கலந்து வருவதே உலக வாழ்க்கை. இவற்றைத் தருவன புலனிச்சைகள். அதனால், புலன்களை ஒடுக்கித் தனிமையாக இருந்து மனத்தைச் செவ்விதான நெறியில் செலுத்தினால், அதுவே இன்பம் எனவும், இன்பதிதல் அடுத்த படிநிலையாக ஔவையார் முன்வைக்குமிடத்தில் இதனை **“ஏகாந்த நிலை”** என்றும் விவரிக்கின்றார்.

மேலும் அறிவினரைச் சேர்ந்து வாழ்வதிலும், அறிவுள்ளவரைக் கனவிலும் நனவிலும் வழிகாட்டுவோராகக் கொண்டு வாழ்வதுமே மிகவும் இனிமையுடையதாக அறிவுறுத்துகிறார். **ஷதூய அறிவினைப் பெறுவதே மனிதனுக்கு இன்பம்'** என்ற கருத்தினை ஔவையார்,

**“அதனினும் இனியது அறிவினர்ச் சேர்தல்**
**அதனினும் இனியது அறிவுள் ளாரைக்**
**கனவினும் நனவினும் காண்பது தானே”.**

என்ற வரிகளில் ‘இனியது எது?' என்பதனைப் பற்றியும் ஔவையார் முருகப் பெருமான் உவக்குமாறு தெளிவுபடுத்துகின்றார்.

**கல்வியின் பயன்!**

பொதுவாக அறன் என்பதற்கு பிறர் மனம் புண்படாதவாறு நடந்துக் கொள்ளுதலே அறம் எனப்படுகிறது. மனிதனிடத்தில் இயல்பாகவே அன்பு இருப்பது போன்று அறிவும் இருக்கிறது. அறிவை வளர்ப்பதற்கான உபாயமாக கல்வி தேவைப்படுகின்றது. உள்ளத்தின் எழுச்சிக்குக் கல்வி முற்றிலும் இன்றியமையாததாக அமைகின்றது. கல்லாதவன் அறமறிய மாட்டாமையால் தவறிழைக்க நேரிடும் எனவே அறம் சிறக்க கல்வி அவசியம். **“அறமே அறிவு, அறிவே அறம்”** எனக் கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகளாகிய சாக்கிரடீஸ், பிளாட்டோ போன்றவர்கள் அளித்த வரையறைகளுக்கேற்ப மனிதனுக்குச் செயற்பாட்டு அறிவைத் தந்து அவனைச் செயலறம் பேறும் அறப் பேறறிஞனாக வாழத் துணை “அறிவியல்” என விளக்கம் கூறுவது மரபு என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது (சங்க இலக்கியங்களில் அறக்கருத்துகள் முனைவர். இரா. அனுராதா) இத்தகைய கல்வியின் சிறப்பைத் தனிப்பாடல்கள் என்னும் இலக்கியம் தனிமனித கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது.

**“கற்க கசடறக் கற்பவை கற்றபின்,**

**நிற்க அதற்குத் தக”**

என்று குறளாசிரியர் கூறுவர். கசடறக் கற்காத கல்வி பயனற்றது. கசடறக் கற்றும் அதற்கிசைய நிற்காதவனின் கல்வியும் பயனற்றது. கல்வியின் இந்த நிலையினை மேலும் நன்கு தெளிவு படுத்துகின்றார் ஔவையார்.

**“எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்**
**பழுதறவா சிப்பரிது பண்பாய் - முழுதுமதைக்**
**கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்**
**நிற்பரிது தானந் நிலை”**

இப்பாடலின் வழி கற்றதன் பயனாக நற்பயனைக் காணுகின்ற தெளிவினைப் பெற்றவர்களே மிகச் சிறந்தவர்கள். அவர்கள் நிலையில் தளராது நிலைபெறும் உறுதித் தன்மையினையும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் நிலையினிற் பிறழாது அவர் உறுதியாக நிற்பாரானால், அதுவே கல்வியின் பயனை அடைந்ததாகும் எனச் சாலச் சிறந்த கல்வி அறத்தினைப் போதிக்கின்றார் ஔவை பிராட்டியார்.

**தொகுப்புரை**

- அறச் செயல்களையே தமிழர்கள் தங்கள் வாழ்வியல் விழுமியங்களாக கொண்டிருந்தனர். மக்கள் தவறான வழிக்குச் செல்லாது நல்ல வாழ்க்கை வாழவும் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளவும் ஔவையாரின் இலக்கியத்தில் பல அறக்காட்பாடுகள் கூறப்பட்டுள்ளன.
- வாழ்வியல் என்ற அடிப்படையில் தனிமனிதனுக்குச் சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் சமுதாயத்திற்கும் பொருந்துகின்றன. அதே போன்று சமுதாயத்திற்குச் சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் தனிமனிதனுக்குப் பொருந்துகின்றன. அற வாழ்க்கையை பொருத்தமட்டில் ஈதல் அவனை சூழ்ந்திருக்கும் சமுகத்திற்கும் கொண்டு சேர்க்கும் பெரும் அறம் என்பது திண்ணம்.
- பண்டைத் தமிழ்ச் சமூகம் கல்வியை அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கருதியது. கற்றவர் பெரிதும் போற்றப்பட்டனர். இழிந்த இனத்தில் பிறந்தவராயினும், வயதில் இளையவனாயினும் கற்றவனேனுயர்ந்தவனாக ஏற்கப்பட்டான். எனவே எவ்வாறாயினும் கற்றல் வேண்டும் என்ற உறுதி மக்களிடம் இருந்ததை பழந் தமிழ் நூல்கள் சான்றாக அமைகின்றன”.(தமிழ் இலக்கிய அறிமுகம், முனைவர் பெ.சுயம்பு)